செ.வெ.எண்:232 நாள்:09.04.2018

**திருநெல்வேலி மாவட்டத்தில் பள்ளி கல்வித்துறையின் மூலம் நீட் தேர்வு பயிற்சி வகுப்பிற்கு செல்லும் 396 மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ,ப. அவர்கள் வழங்கினார்.**

-----

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பள்ளி கல்வித்துறையின் மூலம் நீட் தேர்வு பயிற்சி வகுப்பிற்கு செல்லும் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கும் நிகழ்ச்சி இன்று (09.04.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு 396 மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாணவ, மாணவிகளுடன் பேசியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி பள்ளிக் கல்வித்துறையின் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் 22 பள்ளிகளின் நீட் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி மையங்களில் மாணவ, மாணவிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் ஏற்கனவே உள்ளது. போக்குவரத்து வசதி மற்றும் தடையற்ற மின்சாரம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இம் மையங்களில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளை சேர்ந்த 396 மாணவ, மாணவிகள் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள உள்ளனர். மாணவ, மாணவிகளுக்கு திறமையான ஆசிரியர்களை கொண்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளது. நீட் பயிற்சி வகுப்பிற்கு செல்லும் மாணவ, மாணவிகளுக்கு பயிற்சிக்கு உதவும் வகையில் அரசின் விலையில்லா மடிக்கணினி மற்றும் பயிற்சி புத்தகம் வழங்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம் நமது மாவட்ட மாணவ, மாணவிகள் வரும் மே 6ம் தேதி நடைபெறும் நீட் தேர்வில் பங்கேற்று அதிக அளவில் மதிப்பெண்களை பெற்று இட ஒதுக்கீடு பெற வேண்டும். தேர்வுக்கான கால அவகாசம் குறைவாக உள்ளது. உங்களது குறிக்கோள்களை நிறைவேற்றிட கடினமாக உழைக்க வேண்டும். எனவே பயிற்சியை முழுமையாக பயன்படுத்தி வெற்றி பெற்று நமது மாவட்டத்திற்கு பெறுமை சேர்க்க வேண்டும். என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, மாவட்ட கல்வி அலுவலர்கள் (திருநெல்வேலி) திரு.சின்னத்துரை, (சேரன்மகாதேவி) திரு.ஜெயராஜ், முதன்மை கல்வி அலுவலர் நேர்முக உதவியாளர்கள் திரு.நாராயணன், திரு.அழகுராஜன் மற்றும் அலுவலர்கள் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.